


**REVISION TEST BATCH STARTS ON 4/8/24 (SUNDAY)**

**FOR MORE DETAILS : WHATSAPP - 8438233722**

# ஏழாம் வகுப்பு தமிழ்- இயல் 8

1.ஒருவர் எல்லாருக்காகவும் எல்லாரும் ஒருவருக்காகவும் என்ற பொதுவுடைமை நெறியை வாழும் நெறியாகக் கூறியவர்

A)திருவள்ளுவர் B)முனைப்பாடியார்

C)நாதமுனி D)பூதத்தாழ்வார்

2.அன்பை அகல்விளக்காகவும், ஆர்வத்தை நெய்யாகவும், மனதை திரியாகவும் கொண்டு திருமாலுக்கு விளக்கேற்றுவதாக பாடியவர் யார்?

A)பொய்கையாழ்வார B)பூதத்தாழ்வார்

C)நம்மாழ்வார் D)பேயாழ்வார்

3.பூமியை அகல்விளக்காகவும், ஒலிக்கின்ற கடலை நெய்யாகவும், கதிரவனைச் சுடராகவும் உடைய கடவுளாக பாவிக்கப்படுபவர்?

A)முருகன் B)சிவன்

C)பிரம்மன் D)திருமால்

4.துன்பக்கடல் - இலக்கணக் குறிப்பு தருக

A)உவமை B)உருவகம்

C)வினைத்தொகை D)பண்புத்தொகை

5.சுடர்ஆழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடர்ஆழி நீங்குகவே என்று - இவ்வடிகள் இடம் பெற்றுள்ள நூல்

A)பெருமாள் திருமொழி B)திணைமாலை நூற்றைம்பது

C)அறநெறிச்சாரம் D)நாலாயிரத் திவ்யபிரபந்தம்

6.தவறான இணையைத் தேர்வு செய்க.

A)வெய்ய – கதிரவன் B)இடர்ஆழி – துன்பக்கடல்

C)சொல் மாலை – பாமாலை D)வையம் - உலகம்

7.பொய்கையாழ்வார் திருமாலை எவ்வாறு வர்ணித்து பாடியுள்ளார்?

A)மலர் போன்ற திருவடிகள் கொண்டவர்

B)சிவந்த ஒளிவீசும் சக்கரத்தை உடையவர்

C)செம்மையான பாதங்களை உடையவர்

D)இவற்றில் எதுவுமில்லை

8.திருவெஃகா எனும் ஊர் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?

A)திருப்பத்தூர் B)இராணிப்பேட்டை

C)திருவள்ளூர் D)காஞ்சிபுரம்

9.நாலாயிர திவ்யபிரபந்தத்தில் முதல் திருவந்தாதியைப் பாடியவர்

A)பேயாழ்வார் B)பூதத்தாழ்வார்

C)பொய்கையாழ்வார் D)குலசேகரஆழ்வார்

10. “வையம் தகளியா வார்கடலே நெய்யாக…” இவ்வடிகளில் கடல் எவ்வாறு உவமிக்கப்பட்டுள்ளது?

A)அலைகளையுடைய கடல் B)வற்றாத கடல்

C)அகன்ற கடல் D)ஒலிக்கின்ற கடல்

11. “இன்புருகு சிந்தை இடுதிரியா….” இவ்வடியில் மனம் எதனால் உருகுவதாக பூதத்தாழ்வார் பாடுகிறார்?

A)இன்பம் B)இனிமை

C)அன்பு D)ஞானம்

12.அந்தம் என்ற சொல்லின் பொருள் யாது?

A)தொடக்கம் B)ஆதி

C)இடைநிலை D)முடிவு

13.ஒரு பாடலின் இறுதியில் வரும் எவை அடுத்த பாடலின் முதலாக அமைவது அந்தாதி என்று அழைக்கப்படுகிறது?

A)எழுத்து B)அசை

C)சொல் D)இவையனைத்தும்

14.திருமாலைப் போற்றிப் பாடியவர்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றனர்?

A)நாயன்மார்கள் B)வைணவர்கள

C)பன்னிரு ஆழ்வார்கள் D)முதலாழ்வார்கள்

15.இன்புருகு - இச்சொல்லை பிரித்து எழுதக் கிடைப்பது

A)இன்பம் +உருகு B)இனிமை +உருகு

C)இன்பு +உருகு D)இன் +உருகு

16.பொருத்துக

அன்பு – 1.நெய்

ஆர்வம் - 2.தகளி

சிந்தை – 3.விளக்கு

ஞானம் - 4.இடுதிரி

A)2 1 4 3 B)2 1 3 4

C) 2 4 1 3 D) 2 3 4 1

**REVISION TEST BATCH STARTS ON 4/8/24 (SUNDAY)**

**FOR MORE DETAILS : WHATSAPP - 8438233722**

17.சரியான கூற்றுகளைத் தேர்வு செய்க.
1.நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தில் உள்ள இரண்டாம் திருவந்தாதியைப் பாடியவர் பூதத்தாழ்வார்.
2.பன்னிரு ஆழ்வார்கள் பாடிய பாடல்களில் தொகுப்பே நாலாயிரத் திவ்ய பிரபந்தம் ஆகும்.
3.நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தை தொகுத்தவர் நாதமுனி
4.பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவரும் முதலாழ்வார்கள் எனப்படுவர்.
A)1,2,3 மட்டும் சரி B)2,4 மட்டும் சரி
C)1,3,4 மட்டும் சரி D)அனைத்தும் சரி

18.முனைப்பாடியார் எந்த சமயத்தைச் சார்ந்தவர்?
A)பௌத்தம் B)சைவம்
C)வைணவம் D)சமணம்

19. “அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனஓர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்” இவ்வடியில் எப்போது செய்ய வேண்டிய செயல்களை முனைப்பாடியார் கூறுகிறார்?
A)காலைப்பொழுது B)இளம் வயது
C)குழந்தைப் பருவம் D)அதிகாலை

20.அறநெறிச்சாரம் எத்தனைப் பாடல்களை; கொண்டது?
A)325 B)225
C)235 D)223

21.பொருத்துக
வன்சொல் - 1.கதிர்
உண்மை பேசுதல் - 2.நீர்
அன்பு – 3.களை
அறம் - 4.விதை
ஈகை – 5.எரு
A) 3 2 1 5 4 B) 1 4 3 2 5
C)3 5 2 1 4 D) 3 2 5 1 4

22.முனைப்பாடியார் காலம்
A)மூன்றாம் நூற்றாண்டு B)பதிமூன்றாம் நூற்றாண்டு
C)பதினைந்தாம் நூற்றாண்டு D)ஐந்தாம் நூற்றாண்டு

23.வாழ்க்கைத் தொண்டினையே குறிக்கோளாக உடையது என்பதை திருக்குறள் எதன் மூலம் உணர்த்துகிறது?
A)அன்பு B)கருணை

C)ஒப்புரவு நெறி D)ஈகை

24. 'வாழ்வு அறநிலையைப் பாதுகாவல் வாழ்வாக அமைய வேண்டும்' என்று எடுத்துக் கூறியவர்

A)காந்தியடிகள் B)திருவள்ளுவர்

C)பாவேந்தர் D)அப்பரடிகள்

25. "உலகம் உண்ண உண். உடுத்த உடுப்பாய்" என்று கூறியவர்

A)காந்தியடிகள் B)திருவள்ளுவர்

C)பாவேந்தர் D)அப்பரடிகள்

26.தமிழ் மரபு வறுமையையும், செல்வத்தையும் முறையே இவ்வாறு கூறுகிறது

A)மருந்து, பிணி B)இன்பம், நோய்

C)பிணி, வளம் D)பிணி, மருந்து

27. "செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே" என்று பாடும் நூல்

A)புறநானூறு B)அகநானூறு

C)சிலப்பதிகாரம் D)மணிமேகலை

28.உலகினார் விரும்புமாறு உதவி செய்து வாழ்பவரது செல்வமானது எதனைப் போன்றதாக வள்ளுவர் கூறுகிறார்?

A)பழமரம் B)ஊருணி

C)மருந்து D)பயன்மரம்

29.ஊருணி நீர்நிறைந்து அற்றே உலகவாம்
பேரறி வாளன் ----------.
இக்குறட்பாவில் இறுதியில் வரும் சொல்லை தேர்வு செய்க.

A)படின் B)பயன்

C)திரு D)செயல்

30.மக்கள் பணியையே இறைபணியாக எண்ணி தம் வாழ்நாள் முழுவதும் தொண்டு செய்தவர்

A)திருக்குறளார் வீ.முனிசாமி B)தவத்திரு குன்றக்குடி அடிகளார்

C)இராமலிங்க அடிகளார் D)நம்மாழ்வார்

31.குன்றக்குடி அடிகளார் எதன் தலைவராக விளங்கியவர்?

A)திருவாடுதுறை ஆதீனமடம் B)இராமகிருஷ்ண மடம்

C)இராமலிங்க மடம் D)குன்றக்குடி திருமடம்

32.ஜென் ஜப்பானிய சொல்லின் பொருள்
A)அமைதி B)தியானம் செய்
C)அமைதிகொள் D)பொறுமைகொள்

33.ஜென் சிந்தனையாளர்கள் வாழ்ந்த நாடுகள்
A)சீனா, நேபாளம் B)ஜப்பான், மலேசியா
C)சீனா, ஜப்பான் D)சீனா, இந்தியா

34.ஒரு பொருளை விளக்க மற்றொரு பொருளை உவமையாகக் கூறுவது
A)உவமையணி B)உருவக அணி
C)எடுத்துக்காட்டு உவமையணி D)உயர்வுநவிற்சி அணி

35.இன்ப வெள்ளம் - இலக்கணக் குறிப்பு தருக
A)உவமை B)உருவகம்
C)பண்புத்தொகை D)பெயரெச்சம்

36.சரியான கூற்று எது?
A)உருவக அணியில் உவமிக்கப்படும் பொருள் பின்னும் உவமை முன்னுமாக அமையும்.
B)உவமை, உவமேயம் வேறுபாடு இன்றி இரண்டும் ஒன்றே எனத் தோன்றும்படி கூறுவது உருவக அணி.
C)தேன் போன்ற மொழி என்பது உருவக அணிக்கான எடுத்துக்காட்டு.
D)மேற்கண்ட அனைத்தும்.

37.வையம் தகளியா வார்கடலே நெய்யாக...
இவ்வடியில் பயின்று வந்துள்ளது
A)உவமையணி B)உருவக அணி
C)ஏகதேச உருவக அணி D)எடுத்துக்காட்டு உவமையணி

38.கூறப்படும் இரு பொருள்களில் ஒன்றை மட்டும் உருவகப்படுத்தி, மற்றொன்றை உருவகப்படுத்தாமல் விடுவது
A)உவமையணி B)உருவக அணி
C)ஏகதேச உருவக அணி D)எடுத்துக்காட்டு உவமையணி

39.சுநநை ிழசஉவைல - இச்சொல்லுக்கான சரியான கலைச் சொல் யாது?
A)கடமை B)நற்பண்பு
C)வறுமை D)ஒப்புரவுநெறி

40.கீழ்க்கண்டவற்றுள் எவற்றை ஐயம் தீர ஆராய்ந்து ஒரு செயலைச் செய்ய வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார்?

1.வேண்டிய பொருள் 2.ஏற்ற கருவி 3.செயலின் தன்மை 4.இடம் 5.காலம் 6.வலிமை

A)இவை அனைத்தும்    B)1,2,3,4,5 மட்டும்
C)2,3,4,5,6 மட்டும்    D)1,2,4,6 மட்டும்

41.ஒரு செயலைச் செய்யும் போதே மற்றொரு செயலையும் செய்து முடித்துக் கொள்வது எதற்கு உவமையாக திருக்குறளில் கூறப்பட்டுள்ளது?

A)காகம்    B)கூகை
C)எருது    D)யானை

42. வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று - இக்குறட்பாவில் அமைந்துள்ள அணி யாது?

A)உருவக அணி    B)ஏகதேச உருவக அணி
C)உவமை அணி    D)இவற்றில் எதுவுமில்லை

43.கீழ்க்கண்ட குறள் எந்த அதிகாரத்தில் இடம்பெற்றுள்ளது?
பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்அருமை உடைய செயல்

A)ஈகை    B)பெருமை
C)அரண்    D)வினைசெயல்வகை

44.எதனை சிறந்த நாடு என்று வள்ளுவர் கூறுகிறார்?

A)முயற்சி செய்து சேரும் வளத்தை உடைய நாடு
B)அழிவு செய்யும் பகை சேராமல் உள்ள நாடு
C)சிறந்த அரசன் உடைய நாடு
D)பெரியஅளவில் முயற்சி செய்யாமல் வளம் தரும் நாடு

45.கீழ்க்கண்ட குறட்பாவின் ஈற்றுச் சொல்லைக் கண்டறிக
மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்
காடும் உடையது ----------.

A)நாடு    B)வளம்
C)சிறப்பு    D)அரண்

46.கீழ்க்கண்ட எந்த ஒன்று நாட்டின் அரண் அல்ல என்று வள்ளுவம் கூறுகிறது?

A)காடு    B)வயல்
C)மலை    D)தெளிந்த நீர்

47.கண் +இல்லது – சேர்த்து எழுதக் கிடைப்பது

A)கணிஇல்லது    B)கணில்லது
C)கண்ணில்லாது    D)கண்ணில்லது

48.நாயன்மார் அடிச்சுவட்டில் என்னும் நூலின் ஆசிரியர்
A)குன்றக்குடி அடிகளார் B)வீ.முனிசாமி
C)குலசேகரர் D)இவர்களில் யாருமில்லை

49.குன்றக்குடி அடிகளார் நடத்திய இதழ்கள் யாவை?
1.அருளோசை 2.தமிழன்பு 3.குறட்செல்வம் 4.அறிக அறிவியல்
A)இவையனைத்தும் B)1,3,4 மட்டும்
C)1,2 மட்டும் D)1,4 மட்டும்

50.இளமை - இச்சொல்லிற்கான எதிர்ச்சொல் யாது?
A)முதுமை B)சிறுவயது
C)தனிமை D)இனிமை

**REVISION TEST BATCH STARTS ON 4/8/24 (SUNDAY)**
**FOR MORE DETAILS : WHATSAPP - 8438233722**

TNPSC_PRE_COACHING

TNPSC_PRE_COACHING
TNPSC_PRE_COACHING